**கமகம வருமானம் கொடுக்கும் கறிவேப்பிலை..!**

ஏக்கருக்கு 4,600 கன்றுகள்,மூன்று மாதத்திற்க்கு ஒர அறுவடை.ஏக்கருக்கு 8 டன் மகசூல் தமிழகத்தில் சமைக்கப்படும் பெரும்பாலான உணவுகளிலும் இடம்பெறும் ஒரு விளைபொருள்.. கறிவேப்பிலை! இதற்குக் காரணம்.. அதிலுள்ள வாகனை மட்டுமில்லாமல்.. மருத்துவ குணமும்தான்! அதனால்தான் சந்தையில் கறிவேப்பிலைக்கு எப்போதும் மவுசு குறைவதேயில்லை. இதைச் சரியாகப் புரிந்து கொள்ளும் வவிசாயிகள் பலரும் இதை சாகுபடி செய்யத் தவறுவதில்லை.

கோயம்புத்தூர் மவாட்டம், மேட்டுப்பாளையம். காரமடை சுற்றுவட்டாரப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் கறிவேப்பலை கமகமக்கிறது. பெரும்பாலானோர் ரசாயன இடுபொருட்களைப் பயன்படுத்தி வந்தாலும். சிலர் இயற்கை வழி விவசாய முறையில கறிவேப்பிலை சாகுபடியை மேற்கொண்டிருக்கின்றனர். அவர்களில் ஒருவர்... காரமடை, மங்கலக் கரைப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த நந்தகுமார்.

பச்சை பசேல் கறிவேப்பிலை...



கறிவேப்பிலை மணம் கலந்த மேற்குத் தொடர்ச்சி மலையின் குளிர் காற்று இதமாக வீசிக் கொண்டிருந்த ஒர காலை வேளையில நந்தகுமாரின் தோட்டத்திற்குள் வலம் வந்தோம். வஞ்சகமில்லாமல் விளையும் வளமான செம்மண்பூமி.. பஞ்சமில்லாமல் பாசனத்திற்கு தண்ணீர் கொடுக்கும் கிணறுகள்.

“வாழை, மஞ்சள் என்று நஞ்சை விவசாயம் இருந்தாலும், கறிவேப்பிலைதான் எனக்குப் பிரதான பயிர். அதனால்தான் ஏழு ஏக்கரில் செங்காம்பு என்கிற நாட்டு ரக கறிவேப்பிலையை நட்டிருக்கிறேன்.

பொதுவாக கறிவேப்பிலைச் செடியோட பசுமைக்கும் வாசனைக்கும் பூச்சிகள் அதிகமாக வரும். அதனால் வழக்கமாக வருடத்தில் முப்பது முறைக்கும் மேல் ரசாயனப் பாச்சிக்கொல்லிகளை அடிப்பாங்க. வயலுக்குள்ள போனாலே கறிவேப்பிலை வாசனையைவிட, பூச்சிக்கொல்லி வாசம்தான் தூக்கும். சாப்பாட்டில் அதிகமாக பயன்படுத்துவது கறிவேப்பிலை. பச்சையாக கூட பல சமயங்களில் பயன்படுத்தறாங்க,

அப்படிப்பட்ட  இலைக்கு இப்படியெல்லாம் ரசாயனத்தைப் பயன்படுத்தாமல் கறிவேப்பிலை சாகுபடி பண்ணவே முடியாது என்று தான் சொன்னாங்க.

செயற்கையை வென்ற இயற்கை

அந்த சமயத்தில்தான் முன்னோடி இயற்கை விவசாயி நவநீதகிருஷ்ணன் எனக்கு அறிமுகம் ஆனார். அவர் மூலமாகத்தான் இயற்கை விவசாயத்தைப் பற்றி தெரிந்துக் கொண்டேன். அதோட 'பசுமை விகடன்' மூலமாகவும் பல தகவல்களைக் கற்றுக் கொண்டேன். இயற்கையில் நல்லபடியாக கறிவேப்பிலையை விளைவிப்பதை ஒரு சவாலாகவே எடுத்துக் கொண்ட சாகுபடியில் இறங்கினேன். அதுவரைக்கும் நான் கறிவேப்பிலை சாகுபடி செய்யததேயில்லை. முதன் முதலாக இயற்கையில்தான் ஆரம்பித்தேன்.




முதல் கட்டமாக இரண்டு ஏக்கர் நிலத்தில் நட்டேன். நல்ல மகசூல் அதன் பிறகு ஏழு ஏக்கருக்கு விரிவுப்படுத்தினேன். இப்போ இரண்டு வருடமாக, பஞ்சகவ்யா, மூலிகைப் பூச்சிவிரட்டி, தொழுவுரம், வேப்பம் பிண்ணாக்கு, கொம்பு சாண உரம் என்று இயற்கை இடுபொருட்களைத்தான் பயன்படுத்திக்கிட்டிருக்கிறேன்.

கறிவேப்பிலையை அதிகமாக தாக்கும் இலைச்சுருட்டுப் புழுவையும், புள்ளிநோய், பூஞ்சாணம்,வேரழுகல் மாதிரியான எல்லா நோய்களையும் இயற்கை முறையில்தான் கட்டுப்படுத்துவேன். இதையெல்லாம் நேரடியாக பார்த்துவிட்டு, ரசாயனம் தெளிக்காமல் மகசூல் எடுக்கவே முடியாது என்று சவால் விட்டவங்கள் எல்லாம் இப்ப கொஞ்சம் கொஞ்சமாக இயற்கைக்கு மாறிக்கிட்டு இருக்காங்க.

**அனைத்துப் பட்டங்களுக்கும் ஏற்றது !**



கறிவேப்பிலை வயல்...

அனைத்துப் பட்டங்களும் ஏற்றது!

கறிவேப்பிலை, செம்மண் பூமியில் நன்கு வளரும:. அனைத்துப் பட்டங்களிலும் இதை நடவு செய்யலாம். தேர்வு செய்த ஒரு ஏக்கர் நிலத்தை இரண்டு முறை உழவு செய்ய வேண்டும். பிறகு, 15 டிராக்டர் தொழுவுரத்தை இறைத்து, நிலத்தில் கட்டிகள் இல்லாமல் மண் பொலபொலப் பாகும்படி இரண்டு உழவு செய்ய வேண்டும். பிறகு, ஓர் அடி உயரம், மூன்றரை அடி அகலத்தில் மேட்டுப்பாத்திகளை அமைக்க வேண்டும். நிலத்தின் அமைப்பு, நமது வசதி ஆகியவற்றைப் பொறுத்து பாத்திகளின் நீளத்தை அமைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு பாத்திக்கும் இடையில் ஒன்றரை அடி இடைவெளி இருக்க வேண்டும். பாத்திகளின் மீது சொட்டு நீர்க் குழாய்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

ஏக்கருக்கு 4,600 நாற்று

ராகி, சோளம், கம்பு, தினை,வரகு, சாமை, பாசிப்பயறு, எள், கொள்ளு ஆகிய நவதானிய விதைகளை மொத்தமாக 20 கிலோ அளவில் கலந்து மேட்டுப்பாத்திகளின் மீது விதைத்து பாசனம் செய்ய வேண்டும். 40-ம் நாளுக்கு மேல் இந்தச் செடிகள் வளர்ந்து நிற்கும். அவற்றை வேரோடு பறித்து பாத்திகளின் மேல் போட்டு மண்ணால் மூடி விட வேண்டும். அடுத்த ஒரு வாரத்திற்குள் பாத்திகளின் மையத்தில் இரண்டே முக்கால் அடி இடைவெளியில், அரையடி ஆழத்தில் குழியெடுத்து கறிவேப்பிலை நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4,600 நாற்றுகள் தேவைப்படும்.

மாதம் ஒரு முறை பஞ்சகவ்யா!

பாசனத்தை 10 நாட்களுக்கு ஒரு முறை செய்தால் போதுமானது. சொட்டு நீர்ப்பாசனம் அமைத்தால் களைகள் வளர்வதில்லை. மாதம் ஒரு முறை 100 லிட்டர் தண்ணீரில் 3 லிட்டர் பஞ்சகவ்யாவைக் கலந்த செடிகள் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டும். இதனால் செடிகள் விரைவாக வளர்வதுடன், நல்ல நிறமும் கிடைக்கிறது. 100-ம் நாள்

ஒவ்வொரு செடியின் வேர்ப்பகுதியிலும் 50 கிராம் வேப்பம்பிண்ணாக்கை வைக்க வேண்டும்.

பூச்சிகளுக்க மூலிகைப் பூச்சிவிரட்டி!

இலைச்சுருட்டுப் புழு, இலைப்புள்ளி நோய், பூஞ்சாணம் மற்றும் பனிக்காலங்களில் ஏற்படும் வெண்புள்ளி நோய் போன்றவற்றைக் கட்டுப்படுத்த, 15 நாட்களுக்கு ஒரு முறை, 10 லிட்டர் தண்ணீருக்கு 400 மில்லி என்கிற கணக்கில் மூலிகைப் பூச்சிவிரட்டியைக் கலந்து, அதிகாலை நேரத்தில் தெளித்து வரவேண்டும். இதற்கு இவ்வளவுதான் தேவை என்ற கணக்கு இல்லை. செடிகள் முழுவதும் நன்றாக நனையும்படி தெளிக்க வேண்டியது அவசியம்.

மாதம் தோறும் பௌர்ணமி தினத்தன்று, 100 லிட்டர் தண்ணீரில் 40 கிராம் கொம்பு சாண உரத்தூளைக் கலந்து, ஒரு மணி  நேரம் வைத்திருந்து, பனிப் புகைபோல் தெளிக்க வேண்டும். இதைத் தெளிப்பதால் கறிவேப்பிலை அதிக நறுமணத்துடன் விளையும். அதிக நாட்கள் வாடாமலும் இருக்கும்.

நடவு செய்த 6-ம் மாதத்தில் முதல் அறுவடை செய்யலாம். தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். முதல் அறுவடையின் போது பெரிய அளவில மகசூல் கிடைக்காது. தொடர்ந்து கொஞ்சம் கொஞ்சமாக மகசூல் அதிகரிக்கும்.

ஆண்டுக்கு ஒரு முறை கவாத்து!

முதல் ஆண்டில் 5 டன் முதல் 6 டன் வரை மகசூல் கிடைக்கும். இரண்டாம் ஆண்டிலிருந்து 8 டன் முதல் 10 டன் வரை மகசூல் கிடைக்கும். ஒவ்வொரு மூன்று அறுவடைகளுக்குப் பிறகும், தரையிலிருந்து ஒரு அடி உயரத்திற்க்கு மட்டும் இருக்குமாறு விட்டு, செடிகளை கவாத்து செய்ய வேண்டும். பிறகு, செடிகளுக்கிடையில் உள்ள இடைவெளியில் நவதானியங்களை விதைத்து, 40ஆம் நாள் அவற்றை வேரோடு பறித்து மூடாக்காகப் போட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இப்படிச் செய்வதால் பயிருக்கு உரம் கிடைப்பதுடன், களைகளும் கட்டுப்படும்

செலவைக் குறைக்கும் கேரள வியாபாரிகள்!

இயற்கை முறையில் சாகுபடி செய்யுறப்போது முட்டுவளிச் செலவு குறைவதோடு, நல்ல மகசூலும் கிடைக்கிறது. கறிவேப்பிலை மறுதழைவுப் பயிர் என்பதால் ஒரு தடவை நடவு செய்தால்... 25  வருடம்  வரை மகசூல் கிடைக்கும். வருடத்திற்க்கு நான்கு தடவை அறுவடை செய்யலாம். மார்கழி மாதத்திலிருந்து மாசி மாதம் வரைக்கும் கறிவேப்பிலைக்கு நல்ல விலை கிடைக்கும். எப்படியும் கிலோவிற்கு குறைந்தபட்சமாக 4 ரூபாய் விலை கிடைத்துவிடும். அதிகபட்சமாக 40 ரூபாய் வரை கிடைக்கும். கேரளாவிலிருந்து வரும் வியாபாரிகள், ஆளுங்களை வைத்து அறுவடை செய்து, எடை போட்டு எடுத்துக்கறாங்க, அறுவடைக்கூலி, இறக்குக்கூலி என்று எந்தச் செலவுமே

நமக்கு இல்லை என்பதால்.. அவங்களுக்குத்தான் நான் விலைக்குக் கொடுக்கிறேன். தோட்டத்திலேயே கை மேல் காசு கிடைக்கிறது. எனக்கு சராசரி விலையாக கிலோவிற்க்கு 20 ரூபாய் கிடைத்தது. ஒரு வருடத்திற்க்கு ஒரு ஏக்கரில் குறைந்தபட்ச மகசூல் 8 டன் கறிவேப்பிலை வைத்துக்கிட்டாலும்.. 1 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இதில் செலவெல்லாம் போக 1 லட்சம் ரூபாய் மேல் லாபம் கிடைக்கிறது.

| ஒரு ஏக்கர் நிலத்தில் இயற்கை முறையில் கறிவேப்பிலை சாகுபடி செய்ய நந்தகுமார் சொல்லும் செலவு – வரவு கணக்கு (ரூபாயில்) | | |
|---|---|---|
| விவரம் | செலவு | வரவு |
| உழவு | 2,400 | |
| தொழுவுரம் / இறைப்பு | 22,000 | |
| மேட்டுப் பாத்தி | 3,000 | |
| நவதானிய விதைப்பு/ மூடாக்கு | 1,200 | |
| நாற்று, நடவுக்கூலி | 10,750 | |
| இடுபொருட்கள் தயாரிப்பு / தெளிப்பு | 4,500 | |
| கொம்பு சாண உரம் | 1,000 | |
| வேப்பம் பிண்ணாக்கு | 3,500 | |
| கவாத்து | 4,000 | |
| 8 டன் கறிவேப்பிலை மூலம் வரவு | | 1,60,000 |
| மொத்தம் | 52,350 | 1,60,000 |
| நிகரலாபம் | | 1,07,650 |
| குறிப்பு : சொட்டுநீர் அமைப்பு நிரந்தரச் செலவு என்பதால், இந்தப் பட்டியலில் சேர்க்கவில்லை. | | |

<u>தொடர்புக்கு</u>


நந்தகுமார்,

மங்கலக் கரைப்புதூர் கிராமம், காரமடை

**செல்போன் : 98422 – 72439**



**ஆதாரம் :** www.vikatan.com பசுமை விகடன் வெளியிட்டான தேதி, 25.11.2011